

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 23.05.2024 | 21. ‘ஞாயிறு’ கர்த்தருடைய நாளை கனம் செய்யுங்கள்! |
|---|---|



**பா**ரிஸ் நாட்டில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில், ஸ்காட்லாந்து தேசத்திற்கு முதன் முதலாய் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்த ஓட்டப்பந்தய வீரன், *எரிக் லிடல்!* ஸ்காட்லாந்து மக்கள் இவரை ‘பறக்கும் ஸ்காட்மேன்’ என அழைத்து மகிழ்ந்தார்கள். *எரிக் லிடல்* தேவனுக்கு முற்றிலும் அர்ப்பணித்து வாழ்ந்த கிறிஸ்தவன்! இந்த எரிக் லிடல் ஞாயிற்றுக்கிழமை நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்ள மறுத்ததால், அடுத்து நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் அவரது திறமைக்கு ஏதுவான 100 மீட்டர் பந்தய ஓட்டத்திலிருந்து கட்டாயமாய் வெளியேற்றப்பட்டார்! ஆனால், *எரிக் லிடலை* விரும்பும் மக்களை சமாதானப்படுத்த, 400மீட்டர் ஓட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். *எரிக் லிடல்* சகோதரனுக்கோ, அந்த 400 மீட்டர் ஓட்டப்பயிற்சியில் பழக்க மற்றவராயிருந்தார். பயிற்சி இல்லாத *எரிக் லிடல்* தோற்றுவிடுவார் என்பது உறுதியாகி விட்டது! .....பந்தய நேரம் வந்தது! ஓட்டப்பந்தய எல்லைக் கோட்டிற்கு லிடல் வந்தார். அந்த நேரத்தில், ஒரு அமெரிக்க இளைஞன் ஓடி வந்து, *எரிக் லிடல்* கையில் ஒரு சிறிய காகித துண்டை கொடுத்து விட்டு ஓடிவிட்டான்! அந்த காகிதத் துண்டில் “என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்” என்ற 1சாமுவேல்.2:30-ம் வசனம் எழுதப்பட்டிருந்தது. அதை *எரிக் லிடல்* கையில் வைத்து வாசித்த அடுத்த கணமே பந்தயம் துவங்கிவிட்டது. அந்த வசன காகித துண்டை கையில் இறுகப் பிடித்து கொண்டே *எரிக் லிடல்* ஓடினார்! அந்த பந்தயத்தை *எரிக் லிடல்* ஜெயித்தது மாத்திரம் அல்லாமல், ஏற்கனவே இருந்த ஓட்ட நேரத்தை முறியடித்து 47.6 வினாடிகளில் ஓடி அபார வெற்றி அடைந்தார்!!

– ரத்னம்